

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ஶடகோபாய நம:
ஸ்ரீமதே நாதமுநயே நம:
ஸ்ரீமதே யாமுநமுநயே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேஶிகயை நம:
ஸ்ரீமதே ஆதிவண் ஶடகோப யதீந்த்ர மஹா தேஶிகாய நம:
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக
ஸ்ரீவண்ஶடகோபஸ்ரீ நாராயண யதீந்த்ர
மஹா தேஶிகாய நம:

# திரு விண்ணப்பம்

இயற்றியவர் – நைத்ருவ மாடபூஷி ஹரி ராமாநுஜ தாஸன்

## நேரிசை வெண்பா

1
கல்விக் கடலே கருணைக் கிருப்பிடமே
சொல்வதொன் றுண்டு சுடர்தெருளே – செல்வமே
வேதாந்த தேசிகனே விண்ணப் பமெனதுன்
பாதார விந்தம் படிந்து
2
வேதமுடி ஆரியனே வேண்டும் அருட்தொடர்கள்
தீதிலா நின்திருத்தாள் தேன்மலர்சேர் – சாதுக்கள்
தாளுக் கடிமை தயையால் அருள்செய்வீர்
நாளுமடி யேனுக்கு நன்கு
3
யதிராசச் சித்தாந்தம் யாண்டுமிரட் சிக்க
சதிராய் விரதா சரணம் – கதியாக
செய்யுமருள் தேசிகாதாள் சேர்ந்த அடியேனும்
உய்யவுன் தாசனாய் உள்ளு
4
பற்றின்மை ஞாநங்கள் பாரில் அணிகளாய்
பெற்றாய் அவைபொலிய பேரருளால் – எற்றைக்கும்
தூப்புலருள் தேவே துயரறுக்கும் நின்நோக்கால்
காப்பெனக்குச் செய்ய கருது

5
திருமலைக் கண்டைத் திருவவ தார
குருமணியே அன்பால் கொடுப்பாய் – அருமூன்றை
சாரநூல் சொன்ன சதிர்சொரூப ஆறுடன்
பேறுடைய நிட்டைகள் பீடு
6
சுடர்தெருளார் நின்சிரீ சூக்திகளைக் கற்க
படர்கருளை வெல்ல பலவாம் – உடற்பிணி
வல்வினைகள் தீர்த்தென்றும் வைணவர்கள் சேர்த்தருளாய்
கல்விநிதி தேசிகாதாள் காப்பு
7
என்றும் எலாப்பொழுதும் எப்படியும் எங்கெங்கும்
பொன்றா குருத்தொடரைப் போற்றிட – நன்றாய்
அருளெனக்குச் செய்திடுவாய் ஆரண சூடா
தெருள்குருவே தாசனைத் தேர்ந்து
8
வெங்நரகில் வீழ்ந்தாலும் விண்சென்றா லும்நானென்
சென்னியில் நின்னடிச் செம்மலர் – மன்னவருள்
செய்வாய் எனக்கு சிரீதூப்புல் தேசிகனே
பெய்வாய் அருளாம் பெயல்
9
தாசனாய் வேண்டிகவி தார்கிக கேசரியின்
மாசிலா தாளை மதித்திறைஞ்சி – தேசிகன்தாள்
பத்திக் கடலாய்நாம் பாகவதர் சூழ்ந்தென்றும்
இத்தரையில் வாழயிவை எட்டு
10
பொலிக மறைமுடிப் பொன்தே சிகனார்
பொலிகமறை பொன்றாத போதம் – பொலிகவான்
எண்டிசையும் நற்கலைகள் என்றுமொளிர்ந் தற்புதமாய்
கொண்டமதி தூப்புல் குரு
11
இத்திரு விண்ணப்பம் ஈண்டநு சந்தித்தால்
சத்தியம் தேசிகன் சார்வென்று – பத்தியும்
போகமும் வீடடைய போதமொடு பெற்றிடலாம்
நாகம்போல் நல்லடிமை நன்கு
12
குலச்சிறப்பு கொண்ட குமார வரதர்
நலச்சிறப் போர்ந்து நலமாய் – மலைச்சிரீநி
வாசமணி தேசிகனால் வாழரிரா மாநுச
தாசனுரை செய்தான் தமிழ்

ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேஶிகாய நம:

ஶுபம்